9th August 1966]

திரு. செ. மாதவன் : இப்படி போஸ்டுகள் அனுமதிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன ? காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே சொன்ன மாதிரி இந்த மெதெட் ஆப் ரெக்ரூட்மெண்டு, குவாலிஃபிகேஷன் இவைகளையெல்லாம் டிஸைட் பண்ணின பிறகுதான், அவர்களை அப்பாயிண்ட் செய்ய முடியும்.

* 281 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) 1960 கல்வியாண்டிலிருந்து 1965 கல்வியாண்டுவரை எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில், ஆதித்திராவிட மாணவர்கள் எத்தனைபேர் ?

(உ) எத்தனை சதவிகிதம் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 1,841.

(இ) 164.

(உ) 9 சத விகிதம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் இடம் கொடுக்கும்பொழுது 16 சத விகிதத்திற்குக் குறையாமல் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடைமுறையிலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். மொத்தம் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று வெளிவந்த டாக்டர்கள் 1,841 பேர்களில், 164 பேர்கள்தான் ஆதிதிராவிடர்கள் என்று சொல்கிறார்கள். சதவிகிதத்தைக் கேட்டால் 9 சதவிகிதம் சொல்லியிருக்கிறார்கள். பதினாறு சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பதினாறு சதவிகிதத்தினருக்கு அட்மிஷன் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்தும், சிலர் தேறவில்லை என்றால் யார் பொறுப்பு ? அதனால் தான் 9 சத விகிதம் இருக்கிறது.

* 282 Q.—Sri K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of students admitted in Medical Colleges in the State in 1965–66, from among the Harijans, the Backward Communities and Forward Communities?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஹரிஜனங்கள் 135.

பின்னிலை வகுப்பினர் 230.

முன்னிலை வகுப்பினர் 554.

[9th August 1966

திரு. கி. இரா. சம்பந்தம் : சார், இந்த அரிசனங்களுக்கு என்று
9-30 a.m. ஒதுக்கப்பட்ட சதவிகிதம் மாணவர்கள் எடுக்கப்பட்டார்களா? எடுக்கப்படாத சதவிகிதம் மற்ற முற்போக்கு மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா அல்லது பார்ஃக்வேர்ட் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 16 சதவிகிதத்தில் முழுக்க முழுக்க அவர்கள் எடுக்கப்பட்டார்கள். அதோடு அல்லாமல், மெரிட் பேஸிஸில் ஜெனரல் பூலிலும் எடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய 16 சதவிகிதம் எந்தவகையிலும் குறைக்கப்படவில்லை.

*283 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Central Government have offered any financial aid to the State Government for starting new medical colleges; and

(*b*) if so, the action taken by the State Government thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) The details regarding the new medical colleges to be started during the Fourth Five-Year Plan period have been furnished to the Government of India.

திரு. வை. சங்கரன் : எந்த அடிப்படையில் இந்த உதவி மத்திய சர்க்காரால் கொடுக்கப்படும், இத்தனை கல்லூரிகளுக்கு என்று அல்லது ஒரு கல்லூரிக்கு இவ்வளவு என்று ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான்காவது திட்டத்திலே இந்தியா பூராவிற்கும் 39 மருத்துவக் கல்லூரிகளுக்கு உதவியளிக்க வேண்டும் என்பது திட்டம். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் மூன்று கல்லூரிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆனால், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியும் நான்காவது திட்டத்தில் வருவதாக இருந்தது, மூன்றாவது திட்டத்திலேயே வந்துவிட்டது. இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கு அவர்களுடைய கன்கரன்ஸைக் கோரி எழுதியிருக்கிறோம். அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறோம்.

குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை

*284 *கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்* : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முடிய தமிழ் நாட்டில் மாவட்டவாரியாக குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட ஆண், பெண் முறையே எத்தனை பேர் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A statement [a] is placed on the Table of the House.

[a] Printed as Appendix VI at pages 993-994.